தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்

தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம் - ஆடுதுறை

# நாகப்பட்டினம் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

(23.08.2023 முதல் 27.08.2023)

அறிக்கைஎண்: 67/2023 தேதி: 22.08.2023

## நாகப்பட்டினம் மாவட்டத்தின் கடந்தவாரவானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 36 – 37 °செ ஆகவும் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 26 - 27 °செ ஆகவும் பதிவானது.

## நாகப்பட்டினம் மாவட்டத்தில் எதிர்பார்க்கப்படும் வானிலை (23.08.2023 முதல் 27.08.2023).

| கடந்தவாரவானிலை (18.08.2023 முதல் 21.08.2023) | | | | காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு (23.08.2023 முதல் 27.08.2023) வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| நாள்-1 18/08 | நாள்-2 19/08 | நாள்-3 20/08 | நாள்-4 21/08 | தேதி | நாள்-1 23/08 | நாள்-2 24/08 | நாள்-3 25/08 | நாள்-4 26/08 | நாள்-5 27/08 |
| 0 | 0 | 0 | 0 | மழை (மி.மீ.) | 5 | 4 | 0 | 0 | 2 |
| 36 | 37 | 37 | 37 | அதிகபட்ச வெப்பநிலை (°செ) | 35 | 34 | 34 | 34 | 34 |
| 27 | 26 | 27 | 27 | குறைந்தபட்ச வெப்பநிலை (°செ) | 28 | 27 | 27 | 27 | 27 |
| 4 | 4 | 3 | 4 | மேகமூட்டம் (ஆக்டா) | 7 | 7 | 5 | 4 | 6 |
| 78-78 | 79-78 | 60-86 | 78-76 | அதிகபட்ச மற்றும் குறைந்தபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 80-50 | 80-60 | 80-60 | 80-60 | 80-60 |
| 11 | 8 | 7 | 3 | காற்றின் வேகம் (கி.மீ./மணி) | 18 | 18 | 20 | 20 | 20 |
| மேற்கு | தென் மேற்கு | தென் கிழக்கு | தென் கிழக்கு | காற்றின் திசை | தென் தென் மேற்கு | தென் தென் மேற்கு | தென் தென் மேற்கு | தென் தென் மேற்கு | தென் தென் மேற்கு |

## நாகப்பட்டினம் மாவட்டத்திற்கான வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

வரும் நாட்களில் வானம் பெரும்பாலும் தெளிவாக காணப்படும். 23.08.2023, 24.08.2023 மற்றும் 27.08.2023 ஆகிய தினங்களில் லேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 34 – 35 °செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 27 - 28 °செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 80 சதவிகிதமாகவும், மாலை நேர காற்றின் ஈரப்பதம் 50 - 60 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 18 - 20 கி.மீ. என்ற அளவுக்கு பெரும்பாலும் தென் தென் மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

## வேளாண் அறிவுரைகள்

| | | |
|---|---|---|
| பொது | | உழவர் பெருமக்கள் அனைவரும் தமிழ் நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் பரிந்துரைக்கப்பட்ட வேளாண் சார்ந்த செயலிகளை பதிவிறக்கம் செய்து பயன்படுத்துமாறு கேட்டுக்கொள்ளபடுகிறது (TNAU AAS, Meghdoot and DAMINI). |
| நெல் | அறுவடை | மழைக்கு முன் அறுவடை நிலையில் இருக்கும் குறுவை நெற்பயிரை அறுவடை செய்யவும் |
| | அறுவடை | அறுவடை செய்த குறுவை நெல்லினை மழையில் நனையாமல் பாதுகாக்கவும். |
| | நாற்றாங்கால் | உகந்த வானிலையை பயன்படுத்தி சம்பா நாற்றாங்கால் தயார் செய்து விதைக்கவும். |
| | நடவு வயல் | நிலவும் வானிலையை பயன்படுத்தி மழைக்கு முன்பாக சம்பா நெல் பயிரிட வயல்களை உழவு செய்து தயார் செய்யவும் |
| தென்னை | காய்க்கும் பருவம் | தற்போது நிலவக்கூடிய வானிலையின் காரணமாக தென்னையில் குரும்பை கொட்டுதலை தவிர்ப்பதற்க்கு ஒரு மரத்திற்க்கு 200 மி.லி தென்னை டானிக்கை வேர் மூலம் கொடுக்க வேண்டும் |
| கால்நடைகளுக்கு | பசு | மாட்டு கொட்டகையில் மழை காலங்களில் கொசுக்கள் அதிகமாக இருப்பின் நொச்சி இலை புகைமூட்டம் போடவேண்டும். ஏனெனில் இது பால் சுகாதாரத்தை பாதிக்ககூடும். |

## குறுஞ்செய்தி

நிலவும் வானிலையை பயன்படுத்தி மழைக்கு முன்பாக சம்பா நெல் பயிரிட வயல்களை உழவு செய்து தயார் செய்யவும்

**இயக்குநர்**